செய்தி வெளியீடு எண்: 338 நாள் : 11.07.2016

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. இரா.காமராஜ் அவர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை, கோபாலபுரம் பொது விநியோகத் திட்ட கிடங்கு, அமுதம் நியாய விலை அங்காடிகள், பண்ணை பசுமை நுகர்வோர் கடை, 20 ரூபாய்க்கு 1 கிலோ அரிசி வழங்கும் அங்காடி மற்றும் அமுதம் பல்பொருள் சிறப்பங்காடி ஆகியவற்றில் இன்று (11.07.2016) திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

பொது விநியோகத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் விலையில்லா அரிசி, மானிய விலையில் வழங்கப்படும் சர்க்கரை, கோதுமை மற்றும் சிறப்பு பொது விநியோகத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பருப்பு வகைகள், பாமாயில் ஆகியவை உணவு பொருள் வழங்கல் துறை ஆணையரின் மாத ஒதுக்கீட்டின்படி, கிடங்கிலிருந்து நியாய விலை அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்பட்டிருப்பதையும், அங்காடிகளில் போதுமான அளவு இருப்பு வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு சீரான முறையில் விநியோகம் செய்யப்பட்டு வருவதையும் மாண்புமிகு அமைச்சர் ஆய்வின் போது உறுதி செய்தார்.

கிடங்குகளிலிருந்து விடுவிக்கப்படும் பொருட்கள், தீவிர தர பரிசோதனைக்குப் பின்னரே நகர்வு செய்யப்பட வேண்டுமென்று அறிவுறுத்திய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சேமிப்பிலிருந்த அரிசி, பருப்பு வகைகள் முதலியவற்றின் மாதிரிகளை எடுத்து பரிசோதனை செய்தார். மூட்டைகள் அனைத்தும், இயக்கப் பொறுப்பாளர்கள் (Movement Representative) முன்னிலையில் சமச்சீர் செய்து, ஒப்புதல் பெற்ற பின்னரே லாரிகளில் ஏற்றப்பட

வேண்டுமென்று கிடங்கு அலுவலர்களை அறிவுறுத்திய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், லாரிகளில் ஏற்ற தயாராக வைக்கப்பட்டிருந்த அரிசி மூட்டைகளை மறு எடை செய்து பரிசோதித்தார்.

மேலும், அமுதம் நியாய விலை அங்காடிகள் ஆய்வின்போது, அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் தேவைக்கேற்ப தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறதா என்பதைக் கேட்டறிந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம், நியாய விலை அங்காடிகள், 20 ரூபாய்க்கு 1 கிலோ அரிசி வழங்கும் அங்காடி, பண்ணை பசுமை நுகர்வோர் கடை ஆகியவற்றின் மூலம் தரமான பொருட்கள் சரியான எடையுடன் சீரான முறையில் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன என்றும், பண்ணை பசுமை கடைகளில் புதிய காய்கறிகள் வெளிச்சந்தை விலையைவிட குறைந்த விலையில் வழங்கப்படுகின்றன எனவும் பொது மக்கள் தெரிவித்தனர்.

இந்த ஆய்வின் போது, அரசு உணவுத்துறை முதன்மை செயலாளர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திரு. கா. பாலச்சந்திரன், இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9**